FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319417

1. District : சிவகங்கை PS: உயர் நிலைப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: 2025 FIR No.: 8/2025 Date: 15.10.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: as amended by P.C (Amendment) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 14.10.2025 நாள் முதல் நாள் வரை
Time Period : சுமார் 11.00 hrs Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 15.10.2025 Time : 08.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol. II Time : 08.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: கீராம நிர்வாக அலுவலர் அலுவலகம், பிரான்பட்டி, சிங்கம்புணரி வட்டம்
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : சிவகங்கை மாவட்டம்.
முறைக் காவல் எண் முகவரி சுமார் 60 கி.மீ வடகிழக்கு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. R. பாண்டிதுரை (b) Father's/ Husband's Name : ரவி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 33/2025 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : விவசாயம் (g) Address : க.எண். 407, கு. கணத்திப்பட்டி, பிரான்பட்டி அஞ்சல், சிங்கம்புணரி வட்டம், சிவகங்கை மாவட்டம்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. பாலசுப்பிரமணியன், கீராம நிர்வாக அலுவலர், பிரான்பட்டி குரூப் சிங்கம்புணரி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- No delay -

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 15.10.2025 தேதி காலை 08.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், பிரான்பட்டி அஞ்சல், கு.களத்துப்பட்டி, க.எண்.407 என்ற முகவரியில் வசிக்கும் ரவி என்பவரின் மகன் திரு.ர.பாண்டித்துரை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், பிரான்பட்டி குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.பாலசுப்ரமணியன் ஆகியோரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Ramasamy

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

A. Kannan
DSP/VSC
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 15/10/2025

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்

15.10.2025 at 09.15 hrs

Name: பெயர் (A. கண்ணன்)
Rank: நிலை காவல் அதிகாரி

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
சிவகங்கை.

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.08/2025 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

அன்னாரின் அனுமதி பெற்று, 15.10.2025-ம் தேதி, சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.08/2025 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் R.பாண்டித்துரை. த/பெ.ரவி, க.எண்.407, கு.களத்துப்பட்டி, பிரான்பட்டி அஞ்சல், சிங்கம்புணரி வட்டம், சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 15 ஆண்டுகளாக விவசாய வேலை செய்து வருகிறேன். எனது தாத்தா சுப்பையா மற்றும் 5 நபர்களின் பெயரில் களத்துப்பட்டி கிராமம் பிரான்பட்டி குரூப் சர்வே எண்.253/4ல் உள்ள விஸ்தீரணம் 0.1.00 ஏர்ஸ் புன்செய் நிலமும், சர்வே எண்.253/7ல் உள்ள விஸ்தீரணம் 0.2.00 ஏர்ஸ் புன்செய் நிலமும் உள்ளது. மேற்படி நிலங்கள் தற்போது எனது அனுபவத்தில் இருந்து வருகிறது. எனது தாத்தா சுப்பையா அம்பலம் கடந்த 17.02.2006ல் இறந்துவிட்டார். எனது தாத்தாவிற்கு 2 மனைவிகள் சுந்தம்மாள், பானுமதி ஆவார்கள். இதில் சுந்தம்மாளுக்கு ரவி என்ற மகனாகிய எனது தந்தையும், பானுமதிக்கு கவிதா என்ற மகளும் உள்ளார்கள். எனது பாட்டி சுந்தம்மாள் கடந்த 31.10.1997ல் இறந்துவிட்டார். எனது தந்தை ரவி கடந்த 11.04.2007ல் இறந்துவிட்டார். எனது தந்தைக்கு எனது அம்மா திருமதி.செல்வி, நான், எனது சகோதரிகளான திருமதி.திவ்யபாரதி மற்றும் நர்மதா, சகோதரன் திரு.கங்காதரன் ஆகியோர் வாரிசுகள் ஆவோம். இந்நிலையில், மேற்படி பிரான்பட்டி குரூப் சர்வே எண்.253/4 மற்றும் 253/7ல் கூட்டுப்பட்டாவாக உள்ள நிலங்களுக்கு எனது தாத்தா சுப்பையா என்பவர் பெயரிலிருந்து, மேற்படி அவரது வாரிசுகளாகிய எங்களது பெயரில் கூட்டுப்பட்டாவாக பெயர் மாற்றம் செய்யக் கோரி கடந்த 13.10.2025ம் தேதி திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் இனைய வழியில் விண்ணப்பித்தேன். விண்ணப்பத்துடன் எனது தாத்தா சுப்பையா, பாட்டி சுந்தம்மாள் மற்றும் எனது தந்தை ரவி ஆகியோர்களது இறப்புச்சான்றுகள் மற்றும் வாரிசு சான்றுகள் ஆகியவற்றை ஆன்லைனில் பதிவேற்றம் செய்தேன். அதன்பின்னர், நான் நேற்று 14.10.2025 காலை சுமார் 11.00 மணியளவில் பிரான்பட்டியில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த VAO திரு.பாலசுப்பிரமணியன் என்பவரை சந்தித்து, அவரிடம் மேற்படி எனது பட்டா மாறுதல் விண்ணப்பம் தொடர்பான ஆவணங்களின் நகல்களை கொடுத்தேன். அவர் அந்த ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு, என்னிடம், எல்லாம் சரியாக உள்ளது, உங்க தாத்தா சுப்பையா பெயரிலிருந்து உங்களது பெயரில் கூட்டுப்பட்டா மாற்றிவிடலாம், அதுக்கு கொஞ்சம் செலவாகும், பணம் ரூ.25,000/- கொடுங்க,

எல்லாத்தையும் நானே ஏற்பாடு பண்ணி உங்களுக்கு பட்டா வாங்கி கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். நான் அவரிடம், சார் எல்லா documents கரெக்ட்டா தானே இருக்கு, அப்புறம் எதுக்கு சார் பணம் ரூ.25,000/- கேக்குறீங்க என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், அண்ணன் தீபாவளி வருது, நிறைய செலவுகள் இருக்கு, பணம் கொடுத்தால்தான் உங்களுக்கு பட்டா மாறுதலுக்கு recommend பண்ணி அனுப்புவேன் என்று கறாராக தெரிவித்துவிட்டார். நான் அவரிடம், கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன், அதற்கு அவர் ஒத்துக்கொள்ளவில்லை. பின்னர் நான் அவரிடம், பணத்தை ரெடி பண்ணிட்டு வந்து பார்ப்பதாக தெரிவித்துவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுத்து பட்டா மாறுதல் பெற விருப்பம் இல்லை. ஆகவே, என்னிடம் லஞ்சம் கேட்ட பிரான்பட்டி VAO திரு.பாலசுப்பிரமணியன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் எனது பட்டா மாறுதல் கோரி இ சேவை மையத்தில் விண்ணப்பித்த விண்ணப்பம் மற்றும் அத்துடன் பதிவேற்றம் செய்த ஆவணங்களின் நகல்களை இணைத்துள்ளேன். இப்படிக்கு, sd/xxxxx (R.Pandidurai).

Sir, Received the complaint on 15.10.2025 at 08.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated and obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.08/2025 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 15.10.2025 at 08.30 hrs and took up for investigation. sd/xxxx (A.KANNAN, Inspr/V&AC, 15/10/2025).

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

A. Kannan
Inspr V&AC
15/10/2025